புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

எண்: 04/**TD/DTC/PA/2015** புதுச்சேரி, தேதி: 10.07.2015

## புதிய போக்குவரத்து கிளை அலுவலகத்தில் புதிய சேவைகள் தொடக்கம்

திருபுவனையில் வட்டாரப் போக்குவரத்து கிளை அலுவலகம், மாண்புமிகு புதுச்சேரி முதல்வர் அவர்களால் 08.07.2015 அன்று தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் பழகுனர் உரிமம் மட்டுமே வழங்கி வந்த நிலையில் வரும் திங்கள் கிழமை (13.07.2015) முதல் வில்லியனூர் தாலுகாவினைச் சேர்ந்த வாகனங்களுக்காக கீழ் கண்ட சேவைகள் வட்டாரப் போக்குவரத்து கிளை அலுவலகத்தில் தொடங்கப்படுகின்றன.

(i) வாகனங்களுக்கு சாலை வரி கட்டுதல்.
(ii) உயர் பாதுகாப்பு நம்பர் பிளேட் பொருத்துதல்
(iii) வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ் பெறுதல்.

மேற்கண்டவை தவிர புதுச்சேரியின் அனைத்து பகுதி வாகனங்களும் கீழ்கண்ட சேவைகள் பெறலாம்:

(iv) சுற்றுலா வாகனங்களுக்கு சிறப்பு உரிமம் (ஸ்பெஷல் பெர்மிட்) பெறுதல்.
(v) அனைத்து வாகனங்களுக்கும் மாசுக் கட்டுப்பாட்டு சான்றிதழ் பெறுதல்.

வாகனங்களுக்கான ஒவ்வொரு சேவைக்கும் புதுச்சேரி வரை வந்து செல்லவேண்டிய நிலைமை இல்லாமல் மேற்படி சேவைகளை இனிவரும் காலங்களில் திருபுவனையில் திறக்கப்பட்டுள்ள வட்டாரப் போக்குவரத்துக் கிளை அலுவலகத்தில் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாகன உரிமையாளர்கள் தங்களது வாகனம் மற்றும் உரிய ஆவணங்களை காண்பித்து உரிய கட்டணம் செலுத்தி போக்குவரத்துத் துறையின் மேற்சொன்ன சேவைகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVT OF PONDICHERRY * TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்